காலாண்டுத் தேர்வு - 2025 **Salem**

**10 - ம் வகுப்பு**

# தமிழ்

நேரம் : 15 நிமிடம் . 3.00 மணி மதிப்பெண் : 100

## பகுதி - I ( மதிப்பெண்கள் : 15 )

**அ) சரியான விடையைத் தேர்வு செய்க.** 15×1=15

1. கீழ்க்காண் பனவற்றுள் எந்த இலக்கியம் பிறமொழிப் படைப்பினைத் தழுவித் தமிழில் படைக்கப்பட்டது?
   அ) திருக்குறள் ஆ) கம்பராமாயணம் இ) கலித்தொகை ஈ) சிலப்பதிகாரம்
2. பன்மொழிப் புலவர் என அழைக்கப்படுபவர்_______
   அ) பாவாணர் ஆ) பெருஞ்சித்திரனார் இ) அப்பாதுரையார் ஈ) சச்சிதானந்தன்
3. நச்சப் படாதவன் செல்வம் - இத்தொடரில் தடித்த சொல்லுக்குப் பொருள் தருக
   அ) விரும்பப்படாதவன் ஆ) பிறருக்கு உதவாதவன் இ) ஆசைப்படாதவன் ஈ) போற்றப்படாதவன்
4. காசிக்காண்டம் என்பது _______
   அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
   இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
5. மகிழுந்து வருமா? என்பது
   அ) விளித்தொடர் ஆ) எழுவாய்த் தொடர் இ) வினையெச்சத் தொடர் ஈ) பெயரெச்சத் தொடர்
6. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது
   அ) குலைப் பெயர் வகை ஆ) மணிப்பெயர் வகை இ) கிளைப் பெயர் வகை ஈ) இலைப்பெயர் வகை
7. பழமொழியை நிறைவு செய்க:- உப்பில்லா ___________
   அ) பண்டம் குப்பையிலே ஆ) உள்ளளவும் நினை
   இ) மீறினால் அமுதமும் நஞ்சு ஈ) சோற்றுக்கு ஒரு சோறு பதம்
8. மேகசந்தேசம் என்ற காவியத்தை இயற்றியவர்
   அ) கம்பர் ஆ) காளிதாசர் இ) வீரமாமுனிவர் ஈ) உதய சங்கர்
9. அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார். – இத்தொடரில் இடம் பெறும் வழுவமைதி
   அ) இட வழுமைதி ஆ) கால வழுவமைதி இ) மரபு வழுவமைதி ஈ) பால் வழுவமைதி
10. சிறுவர் நாடோடிக் கதைகள் என்ற நூலின் ஆசிரியர் ________
    அ) மா.நன்னன் ஆ) கிராஜ நாராயணன் இ) எம்.பி. அகிலா ஈ) ச.முகமது அலி
11. நாற்றிசையும் செல்லாத நாடில்லை - இத்தொடரில் இடம் பெறும் தமிழெண்ணைக் காண்க
    அ) ச ஆ) உ இ) சு ஈ) அ

பாடலைப் படித்து வினாக்களுக்கு(12, 13, 14, 15) விடையளிக்க:-

"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி,
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"

12. பாடல் இடம் பெற்ற நூலைத் தேர்க.
    அ. நற்றிணை ஆ. பரிபாடல் இ. முல்லைப்பாட்டு ஈ. மேகம்
13. இப்பாடல் இடம்பெற்றுள்ள அடிமோனையைத் தேர்க.
    அ. உருஅறி - உந்துவளி ஆ. கருவளர் - உருஅறி இ. விசும்பில் - கருவளர் ஈ. உருஅறி - கிளர்ந்த
14. ஊழ் ஊழ் இச்சொல்லின் இலக்கணக் குறிப்பைத் தேர்க_______
    அ. உரிச்சொல்தொடர் ஆ. பெயரெச்சத் தொடர் இ. வினையெச்சத் தொடர் ஈ. அடுக்குத் தொடர்
15. பாடலின் ஆசிரியரைத் தேர்க_____
    அ. இளங்கோவடிகள் ஆ. பரஞ்சோதி முனிவர் இ. கீரந்தையார் ஈ. பெருங்கௌசிகனார்

## பகுதி - II ( மதிப்பெண்கள் : 18 ) பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 4×2=8

**(21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)**

16. **விடைக்கேற்ற வினா அமைக்க.**
    அ. தாவரங்களில் விளையும் தானியங்களை மணி என்போம்.
    ஆ. இந்தியாவிற்குத் தேவையான மழை அளவில் எழுபது விழுக்காடு மழையைத் தென்மேற்குப் பருவக்காற்று கொடுக்கிறது
17. செங்கீரை ஆடுதலில் எந்தெந்த அணிகலன்கள் சூட்டப்படுவதாக முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ் குறிப்பிடுகிறது?

18 மொழிபெயர்ப்பின் பயன் குறித்து எழுதுக.

19 செல்வம் பெருகுவதும் வறுமை வந்து சேர்வதும் எதனால் என வள்ளுவர் உரைக்கின்றார்?

20. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

21 அருமை - என தொடங்கும் குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10

22. "எழுது என்றாள்" என்பது விரைவு காரணமாக "எழுது எழுது என்றாள்" என அடுக்குத் தொடரானது. சிரித்துப் பேசினார்" என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?

23. படிப்போம் பயன்படுத்துவோம்: அ) Consonant ஆ) Culture

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக: கிளர்ந்த

25. தண்ணீர் குடி,தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களின் வகையைக் கண்டறிந்து விரித்து எழுதுக.

26. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க

அ. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும். ஆ. குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

27 கூட்டுநிலை பெயரெச்சங்கள் குறித்து எழுதுக

குறிப்பு :- செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க:- அ) கொள் - கோள் ஆ) விதி - வீதி

28. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக. அ) காண் ஆ) படி

பகுதி - III (மதிப்பெண்கள் -18)

பிரிவு - I

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 2×3=6

29. "புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது" - இது போல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:-

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு . முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால் தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

அ). விருந்தினர் என்போர் யாவர்? ஆ) விருந்து குறித்து தொல்காப்பியர் கூறியது யாது?

இ). இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

31. பலதுறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது?

பிரிவு - II

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6

(34 ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.)

32. இன்மையிலும் விருந்தோம்பல் " குறித்து புறநானூற்றுப் பாடல் தரும் செய்தியை எழுதுக.

33. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

34. (அ) காசிக்கண்டம் பாடலை அடிமாறாமல் எழுதுக (அல்லது)

ஆ) "புண்ணிய புலவீர்" எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடலை எழுதுக.

பிரிவு -III

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க:- 2×3=6

35 மார்கழித் திங்கள் அதிகாலை நேரத்தில் மக்கள் நடைபயிற்சி மேற்கொண்டனர். சிலர் மிதிவண்டியில் சென்றனர். சாலை ஓரத்தில் இருந்த வீட்டின் மதிலை ஒட்டிச் செங்காந்தள் மலர்கள் பூத்துக் குலுங்கியபடி இருந்தன. அவற்றைப் பார்த்தபடியே வீடு சென்றேன்.

ப த்தியைப் படித்துத் தொகைநிலைத் தொடர்களைக் கண்டறிந்து எழுதுக.

36. வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு. - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

37 ஏதேனும் இரண்டு வழுவமைதிகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

பகுதி -IV (மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25

38. அ) ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் கூறியுள்ள கருத்துகளை வள்ளுவர் வழி நின்று விளக்குக. (அல்லது)

ஆ) வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலங்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

39. மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (அல்லது)

ஆ. பள்ளி ஆண்டு விழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை /கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக

40 அ) படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக.



( அல்லது )

ஆ) மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே

நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே - வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

41. சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கோரித் தெரு, கதவு எண். 18அ வைச் சேர்ந்த திரு.சையத் பாஷா என்பவரின் மகள் சைதானி பீவி என்பவர் பத்தாம் வகுப்பு படித்து வருகிறார். அவர் ஆத்தூர் கிளை நூலகத்தில் உறுப்பினராக சேர விரும்பிகிறார். அவருக்கு நூலக உறுப்பினர் படிவம் நிரப்பி உதவுக.

42 அ) **மொழிபெயர்க்க:-**

Respected ladies and gentleman. I am Ilangaovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updates consistently. We should feel proud about our culture. Thank you one and all. **( அல்லது )**

ஆ) **பத்தியைத் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.**

பாரதியின் வசன நடை - சிட்டுக்குருவி

சிறுதானியம் போன்ற மூக்கு; சின்னக் கண்கள்; சின்னத்தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல் வெள்ளை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப் போர்த்த முதுகு சிறிய தோகை; துளித்துக் கால்கள்; இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம் இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு......

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாக ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

1. பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக. 2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

3. பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.

4. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?

5. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3×8=24

43. அ) காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) இறைவன், புலவன் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் விளக்குக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் "கோபல்லபுரத்து மக்கள்" கதைப்பகுதி கொண்டு விவரிக்க. **(அல்லது)**

ஆ) கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) தமிழின் இலக்கிய வளம் - கல்விமொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறத்துறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை.

(மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக. **(அல்லது)**

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக

---

## நூலக உறுப்பினர் படிவம்

.................................................. மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ..................................................

அட்டை எண். | **உறுப்பினர் சேர்க்கை அட்டை** | உறுப்பினர் எண் [ ]

1. பெயர் ..................................................
2. தந்தை பெயர் ..................................................
3. பிறந்த தேதி ..................................................
4. வயது ..................................................
5. படிப்பு ..................................................
6. தொலைபேசி எண். ..................................................
7. முகவரி ..................................................
(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ..................................................

நான் .................................... நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. ............................, சந்தா தொகை ரூ. ........................ ஆக மொத்தம் ரூ. ........................ ரொக்கமாகச் செலுத்துகிறேன், நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் : தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன் .................................... அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன். அலுவலக முத்திரை

பிணைப்பாளர் கையொப்பம் (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில/மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி / தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி/ மாநகராட்சி/ ஒன்றிய /பேரூராட்சி உறுப்பினர்கள்)